# திராவிடப் போராளிகள்

33

■ வழக்கறிஞர் அருள்மொழி

மறைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...

# பினாங்கில் கிடைத்த பூதக்கண்ணாடி ஜானகி அம்மையார்

ஓவியம் : ரவி பேலட்



கல்வியே பெண்களுக்கு கம்பீரத்தை வழங்கும் என்ற கருத்தை விடாமல் வலியுறுத்திய பினாங்கு ஜானகி, 'பெண்களுக்கு வேண்டிய சீதனம் யாது?' என்ற தலைப்பில், 6.4.1930 அன்று வெளியான 'குடிஅரசு' ஏட்டில் கல்வியின் மேன்மையையும், தந்தை பெரியார் அவர்களின் ஒப்பற்ற அன்பையும் மனம் நெகிழும்படி எழுதினார்.

"உதாரணமாக, நம் திரு.ராமசாமி பெரியார் அவர்கள் இந்நாடு வருவதாக பெரிய ஆர்ப்பாட்டமாக இருந்த காலத்தில் பெரியார் அவர்களைக் காண பெரும் ஆவல் கொண்டிருக்கும் பொழுது, பெரியார் வர இரண்டொரு தினத்திற்கு முன் பிரசவ வேதனையால் நான் ஆஸ்பத்திரி செல்ல நேர்ந்தது. பெரியாரைப் பார்க்க கொடுத்து வைக்காது எங்கு எனது உயிர் போய்விடுமோ வென்றஞ்சி சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்கையில், பெரியார் அவர்கள் பினாங்கில் இறங்கிய நாளன்று என்னை விசாரித்து எனது ஷேமலாபங்களைக் கேட்டு, ஈப்போவிற்கு அவசரமாகப் போக வேண்டிய திருப்பதால், திரும்புவாயில் என்னைப் பார்ப்பதாய்ச் சொல்லிவிட்டுச் சென்றார் என்றே சேதி கிடைத்தது. இதனிடையில் ஆண் குழந்தை பிறந்து நற்சுகமடைந்தேன். திரும்ப பெரியார் பினாங்கு வந்தவுடன், பெரியார் அவர்களும் ஸ்ரீமதி மணியம்மையார் அவர்களும் என்னைச் சந்தித்து, குழந்தையை வாரியெடுத்து, மார்போடணைத்து என் ஷேமங்களைக் கேட்டார்கள். அதன்பின் சுவாமி சிதம்பரனார், திரு பொன்னம்பலனார், ஸ்ரீமான் நடராஜன் இவர்களெல்லோரும் வந்து என் நற்ஷேமங்களைக் கேட்டார்கள்.

இவர்களெல்லாம் என்னை எதற்காக மதித்து என் ஷேமங்களைக் கேட்க வேண்டும். நான் அவ்வளவு பெரிய பணக்காரியுமல்ல. என் தாய் தகப்பனார்கள் கருணை வைத்து ஏதோ சிறிது கல்வி என்ற ஆபரணத்தை கற்க வைத்ததினால் அன்றோ இப்பெரியார்கள் என்னை மதித்தார்கள். நானும் ஏதேனும் பித்தளைப் பாத்திரங்களை சீதனமாய்க் கொண்டு சட்டி சுரண்டவும், அடுப்பூதும் தொழில்களில் மட்டும் இருப்பேனாகில் என்னை அடுப்பங்கரையைத் தவிர வேறு ஒருவரும் மதியார். ஆனபடியால், பெண்கள் நன்மதிப்பு பெறவேண்டுமானால்,கல்வி என்ற கண்ணிறைந்த ஆபரணத்தை அணியவேண்டும்".

இக்கட்டுரையில் நமக்கு இன்னொரு செய்தியும் கிடைக்கிறது. 1938 நவம்பர் 13 அன்று தந்தை பெரியாரை 'பெரியார்' என்று மட்டுமே அழைக்க வேண்டும் என்ற தீர்மானத்தை தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாடு நிறைவேற்றியது என்பது வரலாறு. அதற்குப் பல ஆண்டுகள் முன்பே அவர் 'பெரியார்' என்றும் ராமசாமி பெரியார் என்றும் அழைக்கப்பட்டார் என்பதை பினாங்கு ஜானகி அவர்களின் கட்டுரை உறுதி செய்கிறது.

## மகனுக்கு புரட்சியாளர் பெயர்

மலேசியா 1963-ஆம் ஆண்டு வரை பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் இருந்த நாடு. இரண்டாம் உலகப் போர் காலத்தில் அங்கு ஜப்பானின் ஆதிக்கம் சிலகாலம் இருந்தது. மீண்டும் பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டது. அந்நிலையில் சீன மக்களில் ஒரு குழுவினர் அரசை எதிர்த்து கிளர்ச்சியும் கொரில்லா யுத்தமும் நடத்தினர். 1948-ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் அரசு மலேசியாவில் அவசர நிலையை அறிவித்தது. அது 1960-ஆம் ஆண்டு வரை நீடித்தது. மக்கள் கடுமையான சட்ட திட்டங்களையும் கட்டுப்பாடுகளையும் எதிர்கொண்டார்கள்.

அந்தச் சூழ்நிலையில் திடீரென்று அப்பாவு பண்டிதரும் ஜானகி அம்மையாரும் நேரில் விசாரணைக்கு வரவேண்டுமென்று அரசு அதிகாரிகள் அழைத்தனர். விசாரணையில் அவர்கள் எதிர்கொண்ட கேள்வி "எதற்காக உங்கள் மகனுக்கு சன்யாட்சென் என்று பெயர் வைத்தீர்கள்?" என்பதுதான்.

"நாங்கள் பகுத்தறிவாளர்கள். சமூக சீர்திருத்த வாதிகள். அதனால் எங்கள் மூத்த மகனுக்கு 'சமரசம்' என்றும் மகளுக்கு 'சமதர்மம்' என்றும் பெயரிட்டோம். இந்தியாவில் பெண்கள் கணவனின் சிதையிலே உடன்கட்டை ஏற்றப்பட்ட கொடுமையை எதிர்த்துப் போராடிய இராஜாராம் மோகன்ராய் பெயரை மூன்றாவது மகனுக்கு வைத்தோம். கடைசி மகனுக்கு சீனத்து சீர்திருத்தவாதியும் புதிய சீனத்தின் தந்தை என்று பாராட்டப்பட்டவருமான சன்யாட்சென் பெயரை வைத்தோம்" என்று அவர்கள் கொடுத்த விளக்கத்தை ஏற்று அவர்களை தொல்லை செய்யாமல் விட்டது பிரிட்டிஷ் ஆட்சி. எந்த ஆதிக்கத்துக்கும் அஞ்சாத அப்பாவு ஜானகி இணையர்கள் தொடர்ந்து இயக்கப் பணியை ஆற்றினார்கள்.

## தாயும் அவரே... தந்தையும் அவரே

1954-ஆம் ஆண்டு தந்தை பெரியார், அன்னை மணியம்மையார் மற்றும் தோழர்களுடன் மலேசிய நாட்டில் கொள்கைப் பிரச்சாரம் மேற்கொண்டபோது மிகச் சிறப்பாக கூட்டங்களை நடத்தி தந்தை பெரியாருக்கும், உடன் வந்த தோழர்களுக்கும் மிகப்பெரிய வரவேற்பை வழங்கினர் அப்பாவு பண்டிதரும் ஜானகி அம்மையாரும்.

சித்த வைத்தியம் செய்வதில் புகழ்பெற்றவராக விளங்கிய அப்பாவு பண்டிதர் தமிழகத்தில் சிலகாலம் தங்கி இருந்தார். அப்போது அவரது உடல்நலம் பாதிக்கப்பட்டது. மருத்துவர்களின் முயற்சிகளைத் தாண்டி உடல் நலிவுற்று 1959 ஜனவரி மாதம் இறந்துவிட்டார். சென்னையில் நடைபெற்ற அவரது இறுதி நிகழ்வில் தந்தை பெரியார் அவர்கள் பங்கேற்று ஜானகி அம்மையாருக்கு ஆறுதல் கூறினார்.

அப்பாவு பண்டிதரின் மறைவு ஜானகி அம்மையாருக்கு மிகப்பெரும் இழப்பு. ஒத்த கொள்கையால் இணைந்த முப்பதாண்டுகால சுயமரியாதை மணவாழ்வு முடிவுற்ற பின்னும் ஜானகி அம்மையார் திராவிட இயக்க வீராங்கனையாகவே வாழ்ந்தார். தன் பிள்ளைகள் பகுத்தறிவு நெறியுடன் வாழவேண்டும் என்று வலியுறுத்தினார். தாயும் தந்தையுமாய் தானே பிள்ளைகளுக்கு வழிகாட்டினார். அனைவருக்கும் சுயமரியாதைத் திருமணமே நடத்தினார். முதுமையிலும் இயன்றவரை கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்றார்.

**தாயும் தந்தையுமாய் தானே பிள்ளைகளுக்கு வழிகாட்டினார். அனைவருக்கும் சுயமரியாதைத் திருமணமே நடத்தினார். முதுமையிலும் இயன்றவரை கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்றார்.**

படிக்கும் பழக்கத்தின் தேவையை ஜானகி எப்படி மதித்தார் என்பதற்கு ஒரு சான்று இது. 1929-ஆம் ஆண்டு மலேயா சுற்றுப்பயணத்தில், தந்தை பெரியாருக்கு எத்தனையோ பேர் பரிசுப் பொருட்களைக் கொடுத்தார்கள். ஆனால் பினாங்கு ஜானகியோ சிறிய எழுத்துக்களைக்கூட தெளிவாகப் படிக்க உதவும் 'ஒரு கைப்பிடி போட்ட பூதக்கண்ணாடியை' தந்தை பெரியாருக்கு வழங்கினார். அதேபோல் நாகம்மையாருக்கு ஒரு சிறிய பவுண்டன் பேனா பென்சில் அடங்கிய பெட்டியையும் வழங்கினார். நமது மேம்பாட்டுக்காக உழைக்க தேடித் தேடிப் படிக்க தந்தை பெரியாரின் கையில் இருந்த பூதக்கண்ணாடியில் பினாங்கு ஜானகியின் பெயரும் தெரிகிறது.

அவரது தொண்டினை மறவாது, 2004 ஆம் ஆண்டு திராவிடர் கழகத்தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள், திராவிடர் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க மலேசியா சென்றிருந்தபோது ஜானகி அம்மையாரை நேரில் சந்தித்து அவரை நலம் விசாரித்தார்.. முதுமையினால் சோர்வுற்ற போதும் தளராத கொள்கை உறுதியுடன் அவருடன் உரையாடினார் ஜானகி அம்மையார். அவரது மகன்களில் திரு ராஜாராம் மோகன்ராய் மட்டும் தன் குடும்பத்துடன் சென்னையில் வசிக்கிறார்.

கல்வியே பெண்ணுக்கு கம்பீரம் என்று இளம்வயதிலேயே எடுத்துரைத்த ஜானகி அம்மையாரின் வாழ்வு 2005-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முடிவுற்றது. அந்த வாழ்க்கை தரும் படிப்பினைகளுக்கு முடிவேது.?

(வருவார்கள்...)

## பதற வைக்கும் மணிப்பூர் ஆவணப்படம்!




இந்தியாவின் துயரக் கதைகளைச் சொல்லும் மாநிலமாக மணிப்பூர் மாநிலத்தை மாற்றியதுதான் ஒன்றிய பா.ஜ.க. அரசும், அந்த மாநிலத்தை ஆளும் பா.ஜ.க.வும் செய்த சாதனை. கலவரத்தை ஒன்றிய, மாநில அரசுகள் இன்னமும் கட்டுக்குள் கொண்டுவரவில்லை என்கிற தகவல்களும் உள்ளன. இந்த நிலையில், மணிப்பூரின் துயரக் கதைகளை ஆவணப்படமாகக் கொண்டு வந்துள்ளது விகடன் டிவி. மணிப்பூருக்கு பயணம் செய்து, அங்கு நேரில் கண்டவற்றை 'பறத்தல் மறந்த பட்டாம்பூச்சிகள்! மணிப்போரின் கதை' என்று ஆவணப்படமாக்கியுள்ளார், 'காடோடி' இரா.கலை.

அந்த வீடியோவில் சொல்லப்படும் வேட்டைக் கதைகள் நம்மை அதிரவும் பதறவும் வைப்பவை. கொடூரத்தின் உச்சம். மணிப்பூர் கலவரத்தின் தோற்றுவாய், அதற்குக் காரணமாக இருந்தது யார், அவர்களின் பின்புலம், பாதிக்கப்பட்ட குக்கி இன மக்களின் வாக்குமூலம் என அந்த ஆவணப்படம் காண்போரைக் கேள்வி எழுப்ப வைக்கிறது. பா.ஜ.க. ஏன் மனிதகுலத்துக்கே விரோதமான கட்சி என்பதைப் புரிந்துகொள்வதற்கு இந்த ஆவணப்படம் நிச்சயம் உதவும்.

## :ப்ளாஷ்பேக்



### வெண்சீருடை வரவேற்பு!



சேசுராசு

நான் இளம் வயது முதலே தி.மு.க.காரன். மும்பையில் பகுதி கழகம் ஒன்றை உருவாக்கி 10 ஆண்டுகள் ஜவேரி பஜார் பகுதி செயலாளராகவும், 18 ஆண்டுகள் மும்பை மாநில இளைஞர் அணி அமைப்பாளராகவும் பொறுப்பு வகித்து, இன்றளவும் கழகப் பணியாற்றி வருகிறேன். தளபதியார் அவர்கள் மேயராக இருந்தபோது, மும்பை தி.மு.க.வினரின் அழைப்பை ஏற்று 1999 ஏப்ரலில் 16, 17, 18 மூன்று நாட்கள் மும்பை கழக நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார். அப்போது இளைஞர் அணி அமைப்பாளராக இருந்த நான் நூற்றுக்கணக்கான இளைஞர் அணித் தோழர்களை வைத்து வெண்சீருடையில் தலைவருக்குச் சிறப்பான வரவேற்பு அளித்தேன். தாராவியில் நடந்த கூட்டத்தில் ஆளுயர மாலையும் நினைவுப்பரிசும், இளைஞர் அணி வளர்ச்சி நிதியாக 30,000 ரூபாயும் வழங்கினேன்.

**-ம.சேசுராசு, மாநில இளைஞர் அணி முன்னாள் அமைப்பாளர், மும்பை தி.மு.க.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### கவனத்தை ஈர்க்கும் கலைஞர்

**1970-ஆம் ஆண்டு , கலைஞரின் டெல்லி அரசியல் குறித்து எழுதிய 'இந்துஸ்தான் டைம்ஸ்' ஏடு, ''இதற்கு முன்னர், தான் முதலமைச்சராக வருவதற்கு முன்பு டெல்லி பக்கம் வந்திருப்பாரோ இல்லையோ என்று கருதப்படும் கலைஞரின் [திரு. கருணாநிதி என அதில் குறிப்பிடப் பட்டது] செல்வாக்கு அவர் முதலமைச்சராகும் வரை தமிழகத்தின் எல்லையைத் தாண்டவில்லை. ஆனால், இன்று அவர் குறிப்பிடத்தக்க தொடர்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார். அடுத்து வரும் பத்து ஆண்டுகளில் அரசியல் உலகத்தின் கவனத்தைத் தன்பால் இழுக்கக்கூடிய தலைவராக இருப்பார்'' எனப் புகழ்ந்தது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 232




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131